# இரண்டாம் இடைப்பருவத் தேர்வு - 2023

## பதினொன்றாம் வகுப்பு

பதிவு எண்: | | | | | | |

நேரம்: 1.30 மணி

## வணிகவியல்

மதிப்பெண்கள்: 50

பகுதி - அ

I. சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்: 10×1=10

1. சுய உதவிக்குழுக்களுக்கு கடன் அளிக்க ............ வேறுபட்ட முறைகள் உள்ளன.

அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 4

2. உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே இணைப்புச் சங்கிலியாக இருப்பது

அ) வியாபாரம் ஆ) தொழிற்சாலை இ) வணிகம் ஈ) வர்த்தகம்

3. வழங்கல் வழியில் உள்ள முதல் இடைநிலையர் யார்?

அ) மொத்த வியாபாரி ஆ) உற்பத்தியாளர்

இ) சில்லறை வியாபாரி ஈ) வாடிக்கையாளர்கள்

4. சிற்றளவு நிலையிட சில்லறை வியாபாரி என்பதனுள் .......... அடங்குவர்.

அ) இடம் பெயர் வியாபாரிகள் ஆ) சுமை தூக்கும் வியாபாரிகள்

இ) பொதுப் பண்டக சாலைகள் ஈ) வாகனத்தில் விற்போர்

5. நாடுகளுக்கிடையே சரக்குகள் மற்றும் சேவைகள் மட்டும் பரிமாறிக்கொள்ளப்பட்டால் அது ............. எனப்படும்.

அ) பன்னாட்டு வியாபாரம் ஆ) பன்னாட்டு வணிகம்

இ) மறுஏற்றுமதி வியாபாரம் ஈ) உள்நாட்டு வியாபாரம்

6. கப்பல் தலைவரால் சரக்கு பெற்றுக் கொண்டதற்கு ஆதாரமாக வழங்கப்படும் இரசீது

அ) அனுப்புகை இரசீது ஆ) கப்பல் துணைத்தலைவர் இரசீது

இ) கப்பல் இரசீது ஈ) வணிகத் தூதுவர் இடாப்பு

7. உலக வர்த்தக அமைப்பு உருவாக்கப்பட்ட நாள்

அ) 1.1.1996 ஆ) 1.1.1997 இ) 1.1.1995 ஈ) 1.1.1994

8. நாட்டின் பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் ............ பங்களிப்பு இன்றியமையாதவை.

அ) தொழில்துறை உற்பத்தி ஆ) ஏற்றுமதி

இ) வேலைவாய்ப்பு ஈ) மேற்கூறி அனைத்தும்

9. வியாபார இடைநிலையர்களை ............ வகைகளாகப் பிரிக்கலாம்.

அ) மூன்று ஆ) இரண்டு இ) ஐந்து ஈ) நான்கு

10. EPC யின் விரிவாக்கம்

அ) ஏற்றுமதி செயல்முறை குழு ஆ) ஏற்றுமதி வளர்ச்சிக்குழு

இ) ஏற்றுமதி சரக்கேற்றி குழு ஈ) ஏற்றுமதி வளர்ச்சி காங்கிரஸ்



Kindly send me your answer keys to padasalai.net@gmail.com

www.Padasalai.Net

www.Padasalai.Net www.CBSEtips.in



## பகுதி - ஆ

**II. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 17க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 5×2=10

11. குறு நிறுவனங்களுக்கு சில எடுத்துக்காட்டுகள் தருக.
12. மறு ஏற்றுமதி என்பதன் பொருள் யாது?
13. நாணய உறுதிக் கடிதம் என்றால் என்ன?
14. சிறப்பு எடுப்பு உரிமைகள் என்றால் என்ன?
15. சிறப்புப் பண்டக சாலைகள் என்றால் என்ன?
16. பன்னாட்டு வணிகம் என்பதன் பொருள் யாது?
17. இடைநிலையர் என்பவர் யார்?

## பகுதி - இ

**II. எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.**
**வினா எண் 24க்கு கட்டாயம் விடையளிக்கவும்.** 5×3=15

18. வணிக முகவர்களின் வகைகள் யாவை?
19. சிறப்பங்காடிகளின் சிறப்பியல்புகளை விளக்குக.
20. பன்னாட்டு வணிகத்தின் சிறப்புக் கூறுகள் ஏதேனும் மூன்றை விளக்குக.
21. சார்க் அமைப்பின் பணிகள் யாவை?
22. இறக்குமதி வணிகத்தில் பயன்படுத்தப்படும் பல்வேறு ஆவணங்கள் யாவை? ஏதேனும் மூன்று.
23. இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி, இறக்குமதி மூன்றினைக் குறிப்பிடுக.
24. இந்தியப் பொருளாதாரத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களின் பங்கு மற்றும் முக்கியத்துவத்தை விளக்குக.

www.Padasalai.Net

## பகுதி - ஈ

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** 3×5=15

25. அ) சுய உதவிக்குழுக்களின் நோக்கங்களை விவரி. (ஏதேனும் 5)

**(அல்லது)**

ஆ) மொத்த வியாபாரிக்கும், சில்லறை வியாபாரிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை? (ஏதேனும் 5)

26. அ) துறைவாரிப் பண்டகசாலையின் சிறப்பியல்புகளை விவரி.

**(அல்லது)**

ஆ) இறக்குமதி வணிகத்தின் நோக்கங்கள் யாவை?

27. அ) பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிகளைக் குறிப்பிடுக. (ஏதேனும் 5)

**(அல்லது)**

ஆ) உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை?

★★★ / ★★★



Kindly send me your answer keys to padasalai.net@gmail.com

# இரண்டாம் இடைப்பருவ தேர்வு 2023

# 11 ஆம் வகுப்பு வணிகவியல் விடை குறிப்பு

## Vellore District

### பகுதி- அ

1) இ 3

2) அ வியாபாரம்

3) அ மொத்த வியாபாரி

4) இ பொதுப் பண்டகசாலைகள்

5) அ பன்னாட்டு வியாபாரம்

6) இ கப்பல் இரசீது

7) இ 1.1.1995

8) ஈ மேற்கூறிய அனைத்தும்

9) ஆ இரண்டு

10) ஆ ஏற்றுமதி வளர்ச்சி குழு

www.Padasalai.Net

### பகுதி -ஆ

11. குறு நிறுவனங்களுக்கு சில எடுத்துக்காட்டுகள் தருக?

* மண்பாண்டங்கள் செய்தல்

* பழங்கள் மற்றும் காய்கறி விற்பனை செய்தல்

* போக்குவரத்து மூன்று சக்கர டெம்போக்கள் மற்றும் ஆட்டோக்கள் பழுது பார்க்கும் கடைகள்

* குடிசைத் தொழில்கள்

* சிறிய கைத்தொழில்கள் கைத்தறி மற்றும் கைவினை தொழில்கள்

12) மறு ஏற்றுமதி என்பதன் பொருள் யாது?

ஒரு நாட்டில் இருந்து பொருட்களை இறக்குமதி செய்து அவற்றை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் விற்பது மறு ஏற்றுமதி வியாபாரம் ஆகும்

13) நாணய உறுதி கடிதம் என்றால் என்ன?

*ஏற்றுமதியாளர் வரையும் மாற்றுச்சீட்டு தன்னிடம் வரும்போது பணம் தருவதாக இறக்குமதியாளரின் வங்கி அளிக்கும் உறுதிமொழி அடங்கிய கடிதமே நாணய உறுதி கடிதம் ஆகும்

* இது இறக்குமதியாளரின் வங்கி இறக்குமதியாளரின் பணம் செலுத்தும் திறனை பற்றி ஏற்றுமதி அவர்களுக்கு அளிக்கும் உறுதி மொழியாகும்

14) சிறப்பு இடுப்பு உரிமைகள் என்றால் என்ன?

1969 ஆம் ஆண்டில் பன்னாட்டு நாணய நிதியம் சிறப்பு எடுப்புரிமையை துணை பன்னாட்டு நாணய ஒதுக்கீட்டு சொத்தாக உருவாக்கப்பட்டதையே சிறப்பு எடுப்புரிமைகள் என அழைக்கப்படுகிறது இது காகித தங்கம் என விவரிக்கப்படுகிறது

15) சிறப்பு பண்டகசாலைகள் என்றால் என்ன? ஒருவகை பொருட்களில் ஒரு பொருட்களில் ஒரு குறிப்பிட்ட வழி பொருட்களை மட்டும் விற்பனை செய்யும் சில்லறை கடைகள் சிறப்பு பண்டகசாலைகள் எனப்படும்

உதாரணம்

இனிப்பு வகையில் அல்வா மற்றும் விற்போர் துணிக்கடையில் குழந்தை ஆடைகள் மட்டும் விருப்போர்

16) பன்னாட்டு வாணிகம் என்பதன் பொருள் யாது?

நாட்டின் எல்லைகளைக் கடந்து நடைபெறும் அனைத்து வணிக நடவடிக்கைகளின் தொகுப்பே பன்னாட்டு வாணிகம் ஆகும் ரோஜர் பென்னட்

18) இடைநிலையர் என்பவர் யார்?

தொடக்கநிலை உற்பத்தியாளரிடமிருந்து இறுதிநிலை நுகர்வோரிடம் பொற்க்களை சென்று அடையும் வரையில் பண்டங்களின் பரிமாற்றத்தில் ஈடுபட்டுள்ள அனைவருமே இடைநிலையர் ஆவர்

## பகுதி - இ

18) வணிக முகவர்களின் வகைகள் யாவை?

1 தரகர்கள்

2 தன் பொறுப்பு முகவர்கள்

3 கழிவு முகவர்கள்

4 பினை முகவர்கள்

5 ஏலமிடுநர்

6 பண்டகக்காப்பாளர்கள்

www.Padasalai.Net

19) சிறப்பங்காளிகளின் சிறப்பு இயல்புகளை விளக்குக?

* சிறப்பங்காளிகள் பெரும்பாலும் நகரின் மையமாக அங்காடிப் பகுதிகளில் அமைந்திருக்கும்

* பொருள்கள் யாவும் விலை தரம் மற்றும் ரகம் வாரியாக அறைகலன்கள் மீது அடுக்கி வைக்கப்பட்டு இருக்கும்

* வாடிக்கையாளர்கள் தேவையான பொருட்களை தானே எடுத்து வந்து காசாலிடம் உரிய தொகையினை செலுத்தி விட்டு வீட்டுக்கு எடுத்துச் செல்வர்

* இங்கு ரொக்க விற்பனை மட்டுமே உண்டு கடன் விற்பனை கிடையாது

20) பன்னாட்டு வணிகத்தின் சிறப்பு கூறுகள் ஏதேனும் மூன்றினை விளக்குக?

*நாடுகளின் பங்கேற்பு *அன்னிய செலவனே பயன்படுத்துதல் *சட்டபூர்வ கடமைகள் *அதிகப்படியான ஆவணங்கள் தயாரித்தல் *வேறுபடும் பொருளாதார சூழல்

21) சார்க் அமைப்பின் பணிகள் யாவை?

* வளர்ச்சி திட்டத்தை கண்காணித்தல் மற்றும் ஒருங்கிணைத்தல்

* நாடுகளுக்கிடையேயான பிராந்திய முன்னுரிமையை தீர்மானித்தல்

* பிராந்தியத்திற்குள் மற்றும் வெளியே ஒத்துழைப்பு தரட்டுதல்

* உறுப்பு நாடுகளுக்கு நிதி உதவி செய்யும் நடைமுறைகளை கையாளுதல்

22) இறக்குமதி வணிகத்தில் பயன்படுத்தப்படும் பல்வேறு ஆவணங்கள் யாவை ஏதேனும் மூன்று?

* சரக்காணை

* தோற்றுவாய் சான்றிதழ்

* ஏற்றுமதி ஆய்வுச் சான்று

23) இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி இறக்குமதி மூன்றினை குறிப்பிடுக?

ஏற்றுமதி பெட்ரோலிய பொருட்கள் நகைகள் ஆட்டோ மொபைல்ஸ் பையோ கெமிக்கல் மருந்து பொருட்கள்

இறக்குமதி பொருட்கள் என்னை முதலான சுரங்க எரிபொருள் வைரம் மற்றும் விலை உயர்ந்த உலோகங்கள் மின்சார இயந்திர சாதனங்கள் கணினி உள்ளிட்ட இயந்திரங்கள் ஆர்கானிக் கெமிக்கல்

24) இந்திய பொருளாதாரத்தில் குரு சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களின் பங்கு மற்றும் முக்கியத்துவத்தை விளக்குக?

www.Padasalai.Net

மொத்த உள்நாட்டு உற்பத்தியில் எட்டு சதவீதமும் நாட்டின் மொத்த உற்பத்தி திறனில் 45 சதவீதமும் மற்றும் ஏற்றுமதியில் 40% இந்த நிறுவனங்களின் பங்காக உள்ளது 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொருட்களை இவை உற்பத்தி செய்கின்றன 3.6 கோடி நிறுவனங்கள் வாயிலாக 8 கோடி நபர்களுக்கு இவை வேலை வாய்ப்பு அளிக்கின்றனர்

**பகுதி ஈ**

25) சுய உதவி குழுக்களின் நோக்கங்களை விவரி ஏதேனும் ஐந்து?

* பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை ஊக்குவிப்பது

* முறைசாரா கடன் கொடுப்போரின் பிடியிலிருந்து மக்களை

* பெண்களிடம் திறமையை உருவாக்கி ஆக்கப்பூர்வமான செயல்பாடுகளில் அவர்களை ஈடுபட

* பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள மக்களின் மனங்களில் சேமிப்பு பழக்கத்தை

* பெண்களிடம் தொழில் முனைவோருக்கான திறமைகளை வளர்த்தல் மற்றும் ஊக்குவித்தல்

25ஆ மொத்த வியாபாரிக்கும் சில்லறை வியாபாரிக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை

மொத்த வியாபாரி

* இவர் உற்பத்தியாளரையும் சிலரை வியாபாரியும் இணைகிறார் வழங்கல் வழியில் மொத்த வியாபாரி முதல் இணைப்பு சங்கிலி ஆவார்

* மொத்த வியாபாரம் பெருமளவில் நடப்பதால் தொழிலுக்கு மிகப்பெரும் அளவு முதல் தேவைப்படுகிறது

* இவர் ஒரே வகையான பொருட்களை மட்டுமே வாங்கி விற்கிறார்

* இவர் சில்லறை வியாபாரிகளுக்கு கடன் விற்பனை செய்கிறார்

* இவர் மறு விற்பனைக்காக பொருட்களை விற்பனை செய்கிறார்

சில்லறை வியாபாரி

* சில்லறை வியாபாரி மொத்த வியாபாரியையும் நுகர்வோரையும் இணைக்கிறார் வளங்கள் வழியில் சில்லறை வியாபாரி இறுதி இணைப்பு சங்கிலி ஆவார்

* சில்லறை வியாபாரம் சிறு அளவில் மட்டுமே நடப்பதால் சிறிய அளவு முதல் தொகையை

* இவர் பலவிதமான பொருட்களை வாங்கி விற்கிறார்

* இவர் நுகர்வோருக்கு ரொக்கத்திற்கு மட்டுமே விற்பனை செய்கிறார்

www.Padasalai.Net

* இவர் நுகர்வுக்காக பொற்களையை விற்பனை செய்கிறார்

26) துறை வாரி பண்டக சாலையின் சிறப்புகளை விவரி?

*பேரளவு அமைப்பு

*பல் பொருள் விற்பனை *துறைகளின் ஒருங்கிணைப்பு *வாங்கும் வசதிகள் *மைய கொள்முதல்

26) ஆ

இறக்குமதி வணிகத்தின் நோக்கங்கள் யாவை?

*விரைவான தொழில் மயமாக்கம் *நுகர்வோரின் தேவைகளை நிறைவேற்றல் *மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துதல் *பொருள்பற்றாக்குறையை சமாளித்தல் *நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்துதல்

27) அ பன்னாட்டு நாணய நிதியத்தின் பணிகளை குறிப்பிடுக? ஏதேனும் ஐந்து

*இது பன்னாட்டு அளவில் குறுகிய கால கடன் நிறுவனமாக செயல்படுகிறது

*இது பரிமாற்ற விகிதங்களின் சாதாரண வழிகாட்டுதல்களை செய்வதற்கு உதவுகிறது

*இது உறுப்பு நாடுகளின் நாணயங்களை தன்னகத்தை வைத்துள்ளது அதிலிருந்து கடன் வாங்கக்கூடிய உறுப்பினர் நாடுகள் நாணய மதிப்பை பெற்றுக் கொள்ளலாம் *நல்ல வலுவான பொருளாதாரம் மற்றும் நிதி கொள்கையை பின்பற்றும் நாடுகளுக்கு பொருளாதார நிலைத்தன்மை மற்றும் உலகளாவிய வளர்ச்சி

*உறுப்பினர் நாடுகளின் வாணிக சமநிலையில் ஏற்படும் சமனற்ற தன்மையை சரி செய்ய உதவுகிறது

27) ஆ உள்நாட்டு வியாபாரத்தின் இயல்புகள் யாவை?

*ஒரு நாட்டின் எல்லைக்குட்பட்டே வாங்குதல் விற்றல் நடவடிக்கைகள் இடம்பெறும்

* உள்நாட்டு பணமதிப்பு அடிப்படையில் பணப்பரிமாற்றம் நடைபெறும்

* உள்நாட்டு உற்பத்தியாளர் நுகர்வோர் மற்றும் இடைநிலைகளுக்கு இடையேயான நடவடிக்கைகளை உள்ளடக்கியது

* உள்நாட்டு வியாபாரம் இடைநிலையர் மற்றும் முகமை அமைப்புகளின் பொருட்கள் மற்றும் சேவைகள் விநியோகத்தை உள்ளடக்கியது

* இதில் போக்குவரத்து இடர்பாடு பன்னாட்டு வணிக தடையை விட குறைவாகவே உள்ளது.

www.Padasalai.Net

# Prepared by,

சி சுதாகர் முதுகலை ஆசிரியர் பொருளியல் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, ஊதூர்.

கே சுதாகர் முதுகலை ஆசிரியர் பொருளியல் அரசினர் மேல்நிலைப்பள்ளி, பணமடங்கி.

www.Padasalai.Net